| | வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை<br>இணைந்து வழங்குபவர்கள்<br>பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை<br>ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம் மற்றும்<br>ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | **தேனி** | காலம் : | **20/03/2024** | முதல் | **24/03/2024** | |
| அறிக்கை எண் : | **023/ 2024** | வெளியீட்டு நாள் : | | **19/03/2024** | | |

## தேனி மாவட்டத்தின் கடந்த வார வானிலை

பெரும்பாலான பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை 38°-39° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°-26° செல்சியஸ் ஆகவும் பதிவானது.

| கடந்தவார வானிலை (14.03.2024 முதல் 18.03.2024) | | | | | | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு – 24-03-22024- 08.30 வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 14/03 | 15/03 | 16/03 | 17/03 | 18/03 | தேதி | நாள்-1 20/03 | நாள்-2 21/03 | நாள்-3 22/03 | நாள்-4 23/03 | நாள்-5 24/03 |
| 0.0 | 0.0 | 0.0 | 0.0 | 0.0 | மழை (மி.மீ) | 0 | 0 | 3 | 0 | 0 |
| 38 | 39 | 38 | 38 | 38 | அதிக பட்ச வெப்பநிலை (செல்) | 37 | 37 | 36 | 37 | 37 |
| 23 | 26 | 25 | 25 | 24 | குறைந்த பட்ச வெப்பநிலை (செல்) | 24 | 24 | 23 | 24 | 24 |
| 1 | 4 | 4 | 3 | 3 | மேக மூட்டம் (ஆக்டா) | 3 | 5 | 5 | 4 | 3 |
| 57 | 78 | 85 | 78 | 75 | அதிக மற்றும் குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (சதவீதம்) | 80 | 84 | 85 | 78 | 76 |
| 28 | 38 | 36 | 34 | 39 | | 40 | 44 | 46 | 42 | 40 |
| 7 | 6 | 6 | 8 | 5 | காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 10 | 10 | 8 | 10 | 12 |
| கிழக்கு | தென் கிழக்கு | தென் கிழக்கு | கிழக்கு | கிழக்கு | காற்றின் திசை | **கிழக்கு** | **கிழக்கு** | **கிழக்கு** | வட **கிழக்கு** | வட **கிழக்கு** |

## குறுஞ்செய்தி :

மாவட்டத்தின் ஒரு சில இடங்களில் மார்ச் 22 தேதி லேசான மழைக்கு வாய்ப்புள்ளது. அதிகபட்ச வெப்பநிலையானது 36°-37° செல்சியஸ் ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலையானது 23°-24° செல்சியஸ் ஆகவும் பதிவாகலாம். வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 12 கி.மீ வேகத்தில், கிழக்கு மற்றும் வடகிழக்கு திசைகளிலிருந்து காற்று வீசக்கூடும்.

## பொது ஆலோசனை:

**கால்நடை வளர்ப்பு :**

கால்நடை வளர்க்கும் விவசாயிகள் கோடை காலங்களில் ஏற்படும் தீவனப்பயிர்கள் பற்றாக்குறையினை தவிர்க்கும் வகையில் பாசன வசதியுள்ள விவசாயிகள் 10 சதவீத நிலத்தில் கம்பு நேப்பியர் போன்ற தீவனப்பயிர்களை சாகுபடி செய்யலாம்.

**விவசாயம் :**

அடுத்த 5 நாட்களுக்கு மணிக்கு 8 முதல் 12 கி.மீ. வேகத்தில் காற்று வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் விவசாயிகள் கரும்பு, வாழை, பப்பாளி, கொய்யா, முருங்கை போன்ற பயிர்களுக்கு மண் அனைத்தல், முட்டுகொடுத்தல், விட்டம் கட்டுதல் போன்ற பாதுகாப்பு

பழுதடைந்துள்ள கம்பிகள் மற்றும் தூண்களை கண்டறிந்து சரி செய்யவும். போதுமான முட்டுகளை கொடுக்கவும். பயிர்களுக்கு மருந்து தெளிக்கும் வேலைகளை ஒத்திவைக்கவும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : கரும்பு, எலுமிச்சை, கால்நடை.**

**கரும்பு:**
கரும்பு பயிரில் வெள்ளை ஈக்கள் மற்றும் இலைப்பேன் நடமாட்டம் பரவலாக தென்படுகிறது. இவற்றைக் கட்டுப்படுத்த

முதலில் நல்ல வடிகால் வசதி செய்ய வேண்டும்,

காய்ந்த சோகைகளை 5 முதல் 7 வது மாதங்களில் களைந்து அப்புறப்படுத்த வேண்டும்.

மேலும் அதிக தழைச்சத்து நிறைந்த உரங்கள் இடுவதை தவிர்ப்பதன் மூலமாகவும் வெள்ளை ஈக்கள் மற்றும் இலைப்பேனின் நடமாட்டத்தை கட்டுப்படுத்தலாம்.

**வாழை:**
வாழை பயிரிடும் விவசாயிகள் தங்களுடைய வாழை பயிருக்கு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை மண்வெட்டி அல்லது கொத்து கொண்டு மண் அணைக்க வேண்டும்.

மாதம் ஒரு முறை பக்கக் கன்றுகளை கவனமாக அகற்ற வேண்டும்.

காய்ந்த மற்றும் நோய் தாக்கப்பட்ட இலைகளைச் சேகரித்து எரித்து விட வேண்டும். இவ்வாறு செய்தால் வாழை பயிரைத் தாக்கும் இலைப் புள்ளி நோய் பரவுவதை பெரிதும் கட்டுப்படுத்தலாம்.

**கால்நடை:**
விவசாயிகள் தங்கள் கோழிகளை கழிச்சல் நோயிலிருந்து காப்பாற்ற, நோய் தாக்கப்பட்ட கோழிகளை தனியாக பிரித்து வைத்து பராமரிக்க வேண்டும்.

பின் நோய் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படாத கோழி மற்றும் குஞ்சுகளுக்கு 1 லிட்டர் தண்ணீரில் 2 கிராம் மைக்ரசால் பவுடர் அல்லது 2 கிராம் பேக்டிரிசால் பவுடர் மருந்துகளில் ஏதேனும் ஒன்றுடன் 5 மில்லி வைம்ரால் சிரப் இரண்டையும் கலந்து 5 நாட்களுக்கு காலை மாலை என 2 வேளை குடிக்க வைக்க வேண்டும்.

.